# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதி விசேஷமானது

අංක 2384/21 – 2024 මැයි මස 14 වැනි අඟහරුවාදා – 2024.05.14

*2384/21 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*நியதிச் சட்டமுறையான இலக்கம் :- 4654.*
*அடையாளம் அறியும் இல :- இர/227.*

***1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, காணிச் சீர்திருத்தச் சட்டம்***

*19 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்ட முறை நிர்ணயம்*

*ஓமல்பே, தியபொட்ட "லீலா நிவஸ" இல் வசிக்கும் திரு. தயோனிஸ் அப்புஹாமி ராஜபக்ஷ திசாநாயக்க அவர்களால் சட்டத்தின் 18ஆவது பிரிவின் கீழ் நியதிச்சட்ட முறையானதொரு பிரகடனம் செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது அவர் இறந்துவிட்டதால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம், இந்த ஆணைக்குழுவினால் நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு சொந்தமாகவிருந்த கமத்தொழிற் காணிகளில் அவர் வைத்திருக்க அனுமதிக்கப்பட வேண்டிய பகுதிகள் குறிப்பிட்டு அவரின் மரணசாசனச் சொத்துக்கு சட்டமுறையானதொரு நிர்ணயம் விதிக்கப்பட்டுள்ளது.*

*அவ்வாறு நியதிச்சட்டமுறையான குத்தகைக்காரருக்கு வைத்திருக்க அனுமதி வழங்கப்பட்ட கமத்தொழில் காணிப் பகுதி பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.*

*சட்டத்தரணி* ***பண்டுக கீர்த்திநந்த,***
*தலைவர்,*
*காணி சீர்திருத்த ஆணைக்குழு.*

*இல. 475,*
*கடுவெல வீதி,*
*பத்தரமுல்லை,*
*2024, மே 10.*

G41937 – 14 (2024/05)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

சப்பிரகமுவ மாகாணம், இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிபிட்டிய பிரதேச செயலப் பிரிவில், தியபொட்டகம் பற்று சிறு பிரிவில், எம்பிலிபிட்டிய - உடகம (இகிவ 778) எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் வரையப்பட்ட வரைபட இலக்கம் R/LRC/2013/732 (LS) இல் காட்டப்பட்டுள்ளதுமான றொடகலயாய, எலகொட ஹேன, ஹிங்குராரஹேனெ யாய எனும் காணியில் 42 ஏக்கர் 1 றூட் 37.68 பேர்ச்சஸ் அளவு கொண்ட காணித்துண்டு இலக்கம் A மற்றும் அதனுள்ளடங்கிய மரங்கள், பழங்கள் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

EOG 05 - 0112

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.